# RK TUITION CENTRE – KUMBAKONAM

| பத்தாம் வகுப்பு தமிழ் | தேர்வு – 9 | மதிப்பெண் : 50<br>நேரம் : |
|---|---|---|

பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **7 X 1 = 7**

1. ‘இவள் தலையில் எழுதியதோ, கற்காலம்தான் எப்போதும்’ இவ்வடிகளில் கற்காலம் என்பது
   (அ) தலைவிதி (ஆ) பழைய காலம் (இ) ஏழ்மை (ஈ) தலையில் கல் சுமப்பது
2. ‘சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   (அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் (ஆ) அறிவியல் முன்னேற்றம்
   (இ) பெற்ற சுதந்திரத்தைப் பேணி காத்தல் (ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
3. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ---------- வேண்டினார்.
   (அ) கருணையன் எலிசபெத்துக்காக (ஆ) எலிசபெத் தமக்காக
   (இ) கருணையன் பூக்களுக்காக (ஈ) எலிசபெத் பூமிக்காக
4. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி------------
   (அ) உவமை (ஆ) தற்குறிப்பேற்றம் (இ) உருவகம் (ஈ) தீவகம்
5. ‘கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்’ இக்கூற்றில் நாம் புரிந்து கொள்வது
   (அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
   (ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
   (இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
   (ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

“நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக் கிசைகள் பாட”

6. இவ்வடிகளில் இடம்பெற்ற நூல் எது?
   (அ) தேம்பாவணி (ஆ) நதியின் கால்கள் (இ) ஞானம் (ஈ) சிலப்பதிகாரம்
7. படலை – பொருள் தருக.
   (அ) மலை (ஆ) மாலை (இ) மணமலர் (ஈ) மனமலர்

www.Padasalai.Net

பகுதி – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். (10வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** **2 X 2 = 4**

8. “காய்மணியாகு முன்னர்க் காயந்தெனக் காய்ந்தேன்”- உவமை உணர்த்தும் கருத்து யாது?
9. ‘வாழ்வில் தலைக்கனம், ‘தலைக்கனமே வாழ்வு’ என்று நாகூரூபி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?
10. ‘நவமணி’ எனத் தொடங்கும் தேம்பாவணி பாடலை எழுதுக.

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** **2 X 2 = 4**

11. தீவக அணியில் வகைகள் யாவை?
12. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
    பண்பும் பயனும் அது” இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
13. உவமையைப் பயன்டுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
    தாமரை இலை நீர்போல, கண்ணினைக் காக்கும் இமைபோல

பகுதி – 3

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

14. ‘சித்தாளின் மனச்சுமைகள், செங்கற்கள் அறியாது’ - இடம் சுட்டிப் பொருள் தருக.
15. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

16. ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் ‘தர்க்கத்திற்கு அப்பால்’ கதை மாந்தர் வாயிலாக விளக்குக.
17. ஜெயகாந்தன் பெற்ற விருதுகளை எழுதுக.

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம்
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112

R. Karthi M.Sc.B.Ed.

# RK TUITION CENTRE – KUMBAKONAM

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

18. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.
19. தன்மை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி – 4

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 X 4 = 8**

20. மொழிபெயர்க்க.
    1. Education is what remains after one has forgotten what one has learned in School – Albert Einstein
    2. Tomorrow is often the busiest day of the week – Spanish Proverb
    3. It is during our darkest moments that we must focus to see the light – Aristotle
    4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts – WinstonChurchill
21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.




22. கீழ்க்கண்ட பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களை கண்டறிந்து எழுதுக.
    "கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்,
    கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசு கவியை
    காசிம்புலவரை குணங்குடியாரை சேகனாப் புலவரை,
    செய்குத்தம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ"

பகுதி – 5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 X 6 = 18**

23. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்களைப் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.
24. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.
25. உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப் பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

************

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம்
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112
R. Karthi M.Sc.B.Ed.

www.Padasalai.Net